
# பஹாவுல்லா

## கடவுளின் ஜோதி




இரானின் தலைநகரான தெஹ்ரானில் 1817-ஆம் வருடம் நவம்பர் மாதம் 12-திகதியில் பஹாவுல்லா பிறந்தார். தமது சிறுவயது முதற்கொண்டே அவர் மகத்துவத்தின் அடையாளர்களை வெளிப்படுத்தினார். அவர் தமது வீட்டிலேயே சிறிதளவு கல்வி கற்பிக்கப்பட்டார். ஆனால், கடவுளால் உள்ளார்ந்த அறிவு வழங்கப்பட்ட அவர் பள்ளிக்கூடம் செல்வதற்கு அவசியமில்லாமல் போயிற்று.



ஒரு நாள் இரவு, பஹாவுல்லா பரந்த கடலொன்றில் நீந்துவது போல அவரது தந்தை கனவொன்று கண்டார். அவரது உடலில் இருந்து வீசிய ஒளி கடல் நீரை பளிச்சிடச் செய்தது. அவரது நீண்ட கருங்கேசம் எல்லா திசைகளிலும் பரவலாக மிதந்துகொண்டிருந்தது. கணக்கிலடங்கா மீன்கள் அவரைப் பின்தொடர்ந்து அவரது தலை முடி ஒவ்வொன்றின் நுனியையும் கவ்விக்கொண்டிருந்தன. அவர் எந்த ஒரு தடையும் இன்றி சுதந்திரமாக நீந்திக் கொண்டிருந்தார். இக்கனவு பஹாவுல்லா வருங்காலத்தில் அடையவிருக்கும் மகா உன்னதத்தின் பல அடையாளங்களில் ஒன்றாகும்..



பிறகு அவர் இளைஞராக இருந்தபோது, அரசரின் இராஜசபையில் ஓர் உயர் பதவி அவருக்கு அளிக்கப்பட்டது, ஆனால் அவர் அதை நிராகரித்தார். அவர் ஒடுக்கப்பட்டோர், நோயுற்றோர் மற்றும் ஏழைகளுக்கு உதவுவதிலும், மற்றும் நீதிக்காக போராடுவதிலுமே தமது நேரத்தை அர்ப்பணிக்க விரும்பினார்.



அவருக்கு 27 வயதானபோது, பஹாவுல்லா, எல்லா காலத்திற்கும் வாக்குறுதியாக விளங்கியவரை வரவேற்க மக்களை தயார்படுத்த வந்த இறைவனின் புதிய அவதாரபுருஷரான பாப் அவர்களிடமிருந்து புனித வாசகங்கள் அடங்கிய ஒரு சுருள் ஏட்டை பெற்றார். பஹாவுல்லா பாப் அவர்களின் செய்தியை ஏற்று அவரது மிக முக்கிய ஆதரவாளர்களில் ஒருவராக விளங்கினார்.



பாப் அவர்கள் பிரகடனப்படுத்திய செய்தியை ஏற்க விரும்பாத அதிகாரிகள், அவரது நம்பிக்கையாளர்களை துன்புறுத்தும் செயல்களில் இறங்கினர்; அதன் விளைவாக பஹாவுல்லாவின் துன்பங்களும் ஆரம்பித்தன. 1852-ஆம் ஆண்டில் அவர் கைது செய்யப்பட்டு சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு தெஹ்ரானிலேயே மிகவும் கொடிய சிறையொன்றில் அடைக்கப்பட்டார்.



இச்சிறையில், பாப் மற்றும் கடந்தகால அவதாரபுருஷர்கள் அனைவராலும் வாக்களிக்கப்பட்டவர் தாமே என பஹாவுல்லாவுக்கு இறைவன் வெளிப்படுத்தினார். இவ்விருண்ட நிலவரையிலிருந்து உண்மைச் சூரியன் உதயமாகி, உலகிற்கு ஒளி கொடுத்தும், மனித வாழ்வில் ஒரு புதிய காலத்தை பிறப்பிக்கவும் செய்தது.



நான்கு மாத சிறைவாசத்திற்கு பிறகு, அரசாங்கம் பஹாவுல்லாவை அவரது தாய்நாட்டிலிருந்து தேசப் பிரஷ்டம் செய்தது. குளிர்காலத்தின் கடுங்குளிரில், பஹாவுல்லாவும் அவரது குடும்பத்தினரும் தெஹ்ரானிலிருந்து பாக்தாத்திற்கான நீண்ட பிரயாணத்தைத் துவங்கினர்.



பாக்தாத்தில் பஹாவுல்லாவின் விவேகம் எல்லாத் திசைகளிலும் பிரபலமடைந்தது. சமூகத்தின் எல்லா நிலைகளிலும் உள்ளவர்கள் அவரது உதவியையும் ஆலோசனையையும் நாடி அவரது இல்லத்தில் நிரம்பி வழிந்தனர்.பஹாவுல்லாவின் வளர்ந்து வரும் செல்வாக்கை கண்ணுற்ற அரசாங்கம், அவரது தாய்நாட்டிலிருந்து மேலும் அதிக தூரமாக அனுப்பிவிட தீர்மானித்தது



# ரித்வான் தோட்டம்
# ஏப்ரல் 1863

பாக்தாத்தை விட்டு புறப்படுமுன், நகரத்திற்கு வெளியே உள்ள ஒரு பூங்காவில் பஹாவுல்லா 12 நாட்கள் தங்கினார். அங்கு பிரியாவிடை கூற கணக்கற்றவர்கள் சாரி சாரியாக வந்தனர். இத்தோட்டத்தில் இந்நாளிற்கான இறைவனின் அவதாரபுருஷர் தாமே என பஹாவுல்லா பிரகடணப்படுத்தினார். வருங்காலத்தில், நூற்றாண்டுகள் தோறும் ஏப்ரல் 21-ஆம் திகதியிலிருந்து மே மாதம் 2-ஆம் திகதி வரைக்கும், பஹாவுல்லாவின் உலகம் தழுவிய சமயப் பிரகடணத்தின் வருடாந்திர விழாவாக, ரித்வான் பண்டிகை எனக் கொண்டாடப்படும்.


Sulṭán ‘Abdu’l-Aziz
of the Ottoman Empire


Nicolaevitch Alexander II,
Czar of Russia



Franz-Joseph,
Austrian Emperor


Napoleon III, Emperor
of the French


Náṣiri’ d-Dín Sháh
of Persia


Pope Pius IX


Queen Victoria
of England


William I,
King of Prussia

இன்றை துருக்கி நகரங்களான, முதலாவதாக கான்ஸ்டான்டினோப்பிள், பிறகு ஆட்ரியானோப்பிள் ஆகியவை பஹாவுல்லாவின் நாடு கடப்பின் அடுத்த கட்ட இலக்குகளாக அமைந்தன. கைதியும் தேசப் பிரஷ்டியுமான பஹாவுல்லா, ஆட்ரியானோப்பிளிலிருந்து உலக அரசர்கள் மற்றும் ஆட்சியாளர்களுக்கு கடதங்கள் அனுப்பி, அவர்களை நீதியை நிலைநாட்டும்படியும் மற்றும் தங்கள் சக்திகளை பயன்படுத்தி தொல்லைகளுக்கும் போர்களுக்கும் ஒரு முடிவு கட்டும்படியும் உத்தரவிட்டார்.



மறுபடியும் பஹாவுல்லாவின் புகழ் அப்பிரதேச மக்களிடையே பரவி, இம்முறை அவரை மேலும் தூரமாக ஆக்கா நகரத்திற்கு அனுப்பிவிட அரசாங்கம் தீர்மானித்தது. அத்தேசத்தின் கொடிய குற்றவாளிகளையும் புரட்சியாளர்களையும் சென்றவிடம் தெரியாமல் போக ஆக்கா நகர சிறைச்சாலைக்கே அனுப்புவர்.



இச்சிறைவாசம் மிகக் கொடுமையாக இருந்தது. பஹாவுல்லாவின் நம்பிக்கையாளர்கள் பலர் நெடுந்தூரம் பிராயணம் செய்து ஆக்கா சென்றும், அவரது முன்னிலையை அடைய முடியாது போயினர். அவர் அவரது சிறையின் ஜன்னல் வழியாக தமது கையை அசைப்பதை தூரத்தில் இருந்து தரிசிக்க மட்டுமே அவர்களால் முடிந்தது.



பஹாவுல்லாவின் வார்த்தைகள் மற்றும் செயல்களின் சக்தி உயர்ந்தோர் தாழ்ந்தோர் என எல்லோர் உள்ளங்களையும் கவர்ந்து, சிறிது சிறிதாக நிலைமையும் சீராகியது. அவரது வாழ்நாட்களின் இறுதி வருடங்களை நகரத்தின் சுவர்களுக்கு வெளியே, பாஹ்ஜி இல்லத்தில் கழித்தார். ஆக்காவில், மானிடர்களுக்காக கணக்கிலடங்கா வழிகாட்டல்களை பஹாவுல்லா வெளியிட்டார், அவற்றில் அவரது அதி புனித நூலாகிய கித்தாப்'இ'அக்டாஸும் அடங்கும்.



மே மாதம் 1892-ஆம் வருடம் பஹாவுல்லா விண்ணேற்றம் அடைந்தார். அழகிய பூந்தோட்டங்களால் சூழப்பட்ட அவரது புனித உடல் கிடத்தி வைக்கப்பட்டிருக்கும் இடம், உலகிலேயே அதிப் புனிதஸ்தானமாகும். ஆக்கவும் அருகேயுள்ள ஹை·பா நகரும் பஹாவுல்லாவின் உலக அமைப்பு முறையை நிருவ மற்றும் மனிதகுலம் செழிப்புறவும் செயல்படும் பஹாய் சமூகத்தின் ஆன்மீக மற்றும் நிர்வாக மையங்களாக உள்ளன.

பதிப்புரிமை © 2013, 2023 - ரூஹி அறக்கட்டளை, கொலம்பியா
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. பதிப்பு 2.1.2.PE டிசம்பர் 2023, தமிழில் வெளியிடப்பட்டது

ரூஹி பயிற்சிக்கழகம்
மின்னஞ்சல்: instituto@ruhi.org
வலைத்தளம்: www.ruhi.org